**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.20/2025** |
| Prosecution Witness : | **LW - 7 / PW - 5** |
| Name : ஆறுமுகம் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day <u>17.08.2026</u>

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெண்மான்கொண்டான் மேற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் சம்பவ சமயத்தில் சுத்தமல்லி கிராமத்தில் பிர்கா சர்வேயராக பணிபுரிந்து வந்தார். கடந்த 2020 ல் நான் கோவிந்தபுத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலலாக பணிபுரிந்தேன். என்னுடைய அலுவலக பணி என்ன என்றால் சர்வேயர் கிராம நிலங்களை அளவீடு செய்ய வரும்போது, அதற்கு தேவையான கிராம கணக்குகளை எடுத்து கொண்டு சர்வேயருடன் செல்வேன். நான் இல்லாத சமயங்களில் கிராம உதவியாளரை அனுப்பி வைப்பேன். மற்ற சமயங்களில் நானும், எனது கிராம உதவியாளரும் இல்லாதபோது மேற்படி கிராமத்தை சேர்ந்த ரமேஷ் என்பவரை அனுப்பி வைப்பேன். கடந்த 28.12.2020 அன்று குமணந்துறை கிராமத்தை சேர்ந்த சித்ரா, மோகன், ரமேஷ் ஆகியோருடன், அவர்களுக்கு சொந்தமான நிலத்தை அளவீடு செய்ய ரமேஷ் என்பவரை சர்வேயர் சீனிவாசனுடன் அனுப்பி வைத்தேன். மேலும் அன்றைய தினம் என்னுடைய அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, ஒரு ஜீப் வந்து நின்றது. அதில் சுமார் 5, 6 நர்கள் வந்தார்கள். அதில் ஒரு பெண் வந்தார். அவர்கள் என்னிடம் வந்து அரியலூர் விஜிலென்ஸ் அலுவலகத்திலிருந்து வந்திருப்பதாக சொன்னார்கள்.

கீழநத்தம் கிராமத்தை சேர்ந்த கார்த்திக் என்பவரது நிலத்தை உட்பிரிவு செய்வதற்காக சீனிவாசன் என்பவர் இலஞ்சம் வாங்கி பிடிப்பட்டிருப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள். அதன் பின்பு அவரை என்னுடைய அலுவலகத்தில் வைத்து விசாரிப்பதற்காக கேட்டார்கள். நான் அவரை விசாரிப்பதற்கு அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தேன். பிறகு இரவு 09.00 மணியளவில் துணை வட்ட ஆய்வாளர் திரு.சுந்தரம் அவர்கள் என்னுடைய அலுலகத்திற்கு வந்திருந்தார். அவர் முன்னிலையில் சுமார் 11.00 மணி வரை விசாரணை செய்து, மகசர் தயார் செய்தார்கள். அதில் முருகானந்தம், சோமசுந்தரம், சீனிவாசன், வட்ட ஆய்வாளர் சுந்தரம் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். நானும் அதை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள நான்காவது கையொப்பம் என்னுடையது தான். என் கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.**14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விஜிலென்ஸ் காவல் ஆய்வாளர் குணந்துறைக்கு சென்று அந்த இடங்களை நான்குபுறமும் பார்வையிட்டு விசாரித்து குறித்து கொண்டார்கள். டார்ச் லைட் மூலம் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். 02.12.2021 அன்று என்னை அரியலூர் விஜிலென்ஸ் அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கடந்த 15 ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு விஜிலென்ஸ் குழுவினர் அலுவலக விசயம் சம்மந்தமாக என்னை விசாரிக்க வந்தார்களா என்றால் ஆமாம். அவ்வாறு என்னை விசாரிக்க வரும்போது, என்னிடம் வாய்மொழியாக அனுமதி கேட்டால் போதுமா அல்லது எழுத்து மூலமாக அனுமதி கேட்க வேண்டுமா என்றால் என்னிடம் வாய்மொழியாக தான் கேட்டார்கள். VAO விதிகளின் படி வாய்மொழியாக அனுமதி பெற்றால் போதுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் அலுவலக பணியில் இருக்கும்போது, அலுவலக ரீதியாக விசாரணை செய்யும் பட்சத்தில், எழுத்து மூலமாக அனுமதி கோரி நான் அதை என்னுடைய உயர் அதிகாரியிடம் சமர்பித்து அதற்காக அனுமதியை பெற வேண்டும் என்று சொன்னால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் அது போன்ற எழுத்து மூலமான அனுமதியை பெறவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய போலீசார் விசாரணையில் விஜிலென்ஸ் குழுவினர் எங்கள் அலுவலகத்தில் விசாரிக்கும்போது, நான் எங்கள் அலுவலகத்தில் வராண்டாவில் உட்கார்ந்திருந்திருந்ததாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு விசாரணை முடிந்த பிறகு என்னிடம் கையெழுத்து கேட்டபோது, நான் கையெழுத்திட்டேன் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு விஜிலென்ஸ் குழுவினருடன் தனியாக சென்றேன். அப்போது ஆஜர் எதிரி அங்கு இருந்தாரா என்றால் இல்லை. ஆனால் அலுவலகத்தில் என்னிடம் கையொப்பம் பெறும் போது ஆஜர் எதிரி அலுவலகத்தில் தான் இருந்தார். சம்பவ இடத்தில் டார்ச் லைட் அடித்து விசாரித்தபோதும், சம்பவ இடத்தை பார்வையிட்டபோதும் நான் அவர்களுடன் இருந்தேன் என்றால் சரிதான். நான்தான் சம்பவ இடத்தை விஜிலென்ஸ் குழுவினருக்கு காண்பித்தேன் என்றால் சரிதான். பார்வை மகசரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த விசாரணை செய்யவில்லை என்றாலும், விஜிலென்ஸ் குழுவினர் ஏற்கனவே அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து வைத்திருந்தனர் என்றும், அதில் நான் கையொப்பம் போட்டேன் என்றும் போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் விஜிலென்ஸ் குழுவினர் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்தனர் என்றும் அதில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் என் முன்னிலையில் தயார் செய்த ஆவணங்களில் நான் கையெழுத்து போட்டேன். என் அலுவலகத்தில் எந்த ஆவணங்களும் தயார் செய்யவில்லை என்றாலும் போலீசார் கேட்டு கொண்டதிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>** இல்லை.

(ஒம்) – திருமதி.K.S.ஜெயமங்களம்,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.